

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## 'தர்க்கம் இல்லாத' ஜீவியம் தரும் இயேசு!

தன் சீஷர்களோடு 'தல்மனூத்தா' என்ற ஊருக்கு இயேசு ஒரு படகில் பயணம் சென்று இறங்கினார்! இன்னமும் அவர் ஊருக்குள் போகவில்லை..... அதற்குள்ளாகவே, அங்கு வந்த 'பரிசேயர்கள்' இயேசுவிடம் "நீர் வானத்திலிருந்து வந்தவன் என்று சொல்லுகிறீரே, அப்படியானால் ஒரு அற்புதத்தையாகிலும் வானத்திலிருந்து காண்பியும்!" என தர்க்கிக்கத் தொடங்கினார்கள். இயேசுவோ 'அற்புதத்தை கண்டு' தன்னை யாரும் விசுவாசித்திட விரும்பவில்லை! (மாற்கு 8:10-12).

மேலும், இயேசு ஒருபோதும் யாரிடமும் தர்க்கம் அல்லது வாக்குவாதம் செய்ததில்லை! அப்படியானால், வழக்கு செய்பவர்களிடமிருந்து தப்பிப்பது எப்படி? ஆம், 'தர்க்கிப்பவர்களை விட்டு' 'மறுபடியும் படவில் ஏறி' அக்கரைக்கு திரும்பிச் சென்று விட்டார்! (மாற்கு 8:13). 'தல்மனூத்தாவில்' எந்த ஊழியமும் செய்யவில்லை.... ஆனால், மாபெரும் ஜீவிய பாதையை அங்கு ஒளிவீசச் செய்துவிட்டார்! 'தர்க்கிப்பும், முறுமுறுப்பும் நிறைந்த' இந்த 'கோணலும் மாறுபாடுமான' சந்ததியில், நாமோ இயேசு காண்பித்த ஜீவ சுடரை நம் இல்லத்திலும், சபையிலும் பிரகாசித்திடக்கடவோம் (பிலி. 2:14-16). *-tr*

பெட்டகம் 39 மார்ச் 2023 பரல்கள் 03



## ஊழியத்தில், தியாகமா? ஆதாயமா? வெளியரங்கமாக்கும் கர்த்தர்!

திரள்கூட்டம் இயேசுவைப் பின்சென்ற போதிலும் எல்லாரையும் அவர் நம்பவில்லை. அவர்கள் அவர் உபதேசத்தை ஆவலோடு கேட்டார்கள். ஆகிலும், எல்லாரும் அவருக்குச் சீஷராகவில்லை! முடிவுபரியந்தம் நிலைநிற்கவுமில்லை! இக்கால ஊழியத்தில், ஒரு கிராமத்தார் கொஞ்சம் இணங்கினால், நாம் சந்தோஷத்தோடு அவர்களை மார்க்கத்தில் சேர்த்துக் கொள்கிறோம்! நமக்குத் தொகை பிரியம்!... ஆண்டவருக்கு உண்மை பிரியம்!

எப்படியென்றால், ஒரு சமயம் வேதபாரகனொருவன் அவரிடத்தில் தனித்து வந்து: போதகரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான். 'வார்த்தைகளை மாத்திரம் பார்த்தால்' நிகரற்ற பிரதிஷ்டையுள்ளவன்போல் தோன்றினான்! ஆனால் ஆண்டவரோ, அவன் நோக்கத்தை அறிந்திருந்தார்! அவன் உலகசிந்தையுள்ளவன். கிறிஸ்துவோடு சேர்ந்து கொண்டால், தனக்கு மேன்மையான பதவி கிடைக்கும் என்று எண்ணி அப்படிச் சொன்னான். "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்றே, தன்னைப் பின்பற்றும் ஊழியனின் தரத்தை கூறினார்! ஆண்டவர் கொடுத்த உத்தரவால் அவனுடைய அந்தரங்கம் வெளிப்பட்டது! தன்னை உற்சாகமாய் பிரதிஷ்டை செய்த வேதபாரகன், மறுவார்த்தையின்றி வந்தவழியே திரும்பினான்! தன் சொந்த நாசரேத் ஊரிலிருந்து புறப்பட்டுச் சென்று இயேசு செய்த தியாக ஊழியத்தைப்போல், தன் குருவைப் பின்பற்றும் ஊழியர்கள் வெகு சொற்பமே இருக்கிறார்கள்!

*-Ed*

### 2023 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.**170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு மார்ச் 25-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**140/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**950/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## அடைபட்ட வேளைகளில் 'வாசல் திறக்கும்' ஆண்டவர்!

*அவர் திறக்கும் வாசலில் 'இனிமை' உண்டு*

**யோ**வான் அப்போஸ்தலன், பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டதை சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய வார்த்தைக்காகவும் இயேசுவின் சாட்சிக்காகவும் தனிமையில், கரடுமுரடான தீவில், ஒருவராலும் விசாரிக்கப்பட முடியாத சிறைவாசத்தில் இருந்தார். இதுபோன்ற மோசமான சூழ்நிலையில், எபேசு பட்டணத்தில் குடியிருந்த தனக்குப் பிரியமானவர்களை விட்டு பிரிக்கப்பட்ட நிலையில், சபை ஆராதனை முற்றிலுமாய் தடைபண்ணப்பட்ட துயர நிலையில், தீய செயலினிமித்தம் தண்டிக்கப்பட்டவர்களோடு அவரும் ஒருவராக தள்ளப்பட்ட நிலையில்தான் 'பரம தரிசனங்கள்' வழங்கப்பட்டது. உண்மைதான், அங்கு அவருக்கு "**ஒரு வாசல் திறக்கப்பட்டது!**".

இதுபோன்ற அதிசயம், பலமுறை கர்த்தருடைய பக்தர்களுக்கு சம்பவித்திருக்கிறது. தன் தகப்பன் வீட்டிலிருந்து விரட்டப்பட்ட யாக்கோபு, ஓர் வனாந்தரமான பாலைவனத்தில் சோர்வுடன் தூங்குவதற்கு படுத்துவிட்டார். அந்த வேளையில் தோன்றிய ஒரு கனவு, பரத்தின் தரிசனமாய் அவருக்கு மாறியது. வானத்தையும் பூமியையும் இணைத்த "**ஒரு ஏணியை**" கண்டார். அந்த ஏணியின் உச்சியில் தேவன் நின்று கொண்டிருந்தார்! இதுபோன்று, அநேக தாசர்களுக்கு, பரலோகத்தில் வாசல் திறக்கப்பட்டிருக்கிறது! இன்றும், இந்த உலகத்தில் காணப்படும் பல்வேறு இருண்ட சூழ்நிலைகளை ஒப்பிடும்போது 'ஓர் வாசல் திறக்கப்படுவது' எப்படி சாத்தியம்? என்றே தோன்றுகிறது!

'கிறிஸ்துவினிமித்தம் கைது செய்யப்பட்ட' அநேக கைதிகளுக்கு பரத்தின் வாசல் திறக்கப்பட்ட அனுபவம் ஏற்பட்டுள்ளது! 'தொடர்ச்சியான வேதனைக்குள்' சிக்கியவர்களுக்கு, பரத்தின் வாசல் திறக்கப்பட்டிருக்கிறது! இரும்பு சங்கிலியால் கட்டப்பட்டவர்களுக்கு, பரத்தின் வாசல் திறக்கப்பட்ட அனுபவம் உண்டு! வியாதிப் படுக்கையில் நீண்ட காலம் இருந்த அநேக பரிசுத்தவான்களுக்கு பரத்தின் வாசல்

*திறக்கப்பட்டிருந்தது! ஊழியத்திநிமித்தம் தனியாய் பயணித்த தாசர்களுக்கு பரத்தின் வாசல் திறக்கப்பட்டிருந்தது! தேவ பக்தர்கள், ஓர் பரதேசியைப்போல் அலைய வேண்டிய சூழ்நிலையில், அவர்களுக்கு பரத்தின் வாசல் திறக்கப்பட்டிருக்கிறது! பெற்றோர்களின் கண்டிப்பால், தங்கள் விசுவாசத்திநிமித்தம், அநேக சகோதரிகள் கர்த்தருடைய ஆலயம் செல்ல முடியாமல் அடைத்து வைக்கப்பட்டிருந்த நேரத்தில், பரத்தின் வாசல் அவர்களுக்கு திறக்கப்பட்டிருந்தது!*

**அடைபட்ட சூழ்நிலையில் 'ஓர் வாசல் திறக்கப்படுவது' அற்புதம் அல்லவா!** *இந்த அற்புதங்களுக்குப் பின்னாக மறைந்திருக்கும் ஆவிக்குரிய தகுதியும் உண்டு. அப்போதுதான், யோவான் அப்போஸ்தலனைப்போல 'ஆவிக்குள்ளாகும்' நிலையை நாம் புரிந்துகொள்ள முடியும்:*

*நீங்கள் இருதயத்தில் சுத்தமாயிருக்க வேண்டும்! விசுவாசத்திற்கு கீழ்படிந்து வாழ வேண்டும்! இயேசு கிறிஸ்துவோடு நெருங்கிய ஐக்கியத்தில் வாழும்படி, அந்த மேன்மைக்காக உங்களுக்கு உண்டான யாவற்றையும் நஷ்டமென்று எண்ணி புறக்கணிப்பதற்கு ஆயத்தம் கொண்டவர்களாயிருக்க வேண்டும்! இவ்வாறாக, தேவனே உங்களுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமுமாய் மாறும்போது, நீங்கள் அவருக்குள் பிழைத்து! அவருக்குள் அசைந்து! அவருடைய தயவில் வாழ்வீர்கள்! இவ்வாறு வாழும் தாழ்மையான மாந்தர்களுக்கு, அடைபட்ட சூழ்நிலைகளில் "ஓர் வாசல் பரலோகத்தில் திறக்கப்படுவது" அதிக நிச்சயம்!*

> *பரலோக வாசல் திறக்கப்படும்போது கண்டடையும் ஆவிக்குரிய அனுபவம் ஆச்சரியம் நிறைந்ததாயிருக்கும்! வெறுமையும், இருண்டதுமான மலைப் பிரதேசத்தில் இருக்கும்போது "இங்கு நீ சந்று என்னோடு தனிமையில் இளைப்பாறுவது நல்லது" என்ற குரல் அவர்களுக்கு ஓங்கிய பலத்தைக் கொடுத்திருக்கிறது! கரடுமுரடான பாதைகளில் நடத்தப்பட்ட நீ "சுத்தமான காற்றை மகிழ்வுடன் சுவாசிப்பாயாக" என்ற குரல் கேட்ட தாசர்கள் உண்டு! தனிமையின் உச்சத்தில் சென்ற அவர்களுக்கு "இந்த நாள், உன்னை மாத்திரம் கண்டு புன்னகைப்பதைப் பார்" எனக்கூறும் அன்பின் சத்தம் கேட்டவர்களும் உண்டு!*

பரந்து விரிந்த பாலைவன தனிமையில், கடல்போல் விரிந்து கிடக்கும் இளம் சிவப்பான மணலை தேவன் சுட்டிக்காட்டி "**இந்த வானத்தின் திரை விலகி** உனக்கு முன் விழுந்து கிடப்பதைப்பார். கையினால் பின்னப்படாத இந்த திரையை சர்வ வல்ல தேவன் உனக்காக திறந்து விழச்செய்து விட்டார். இப்போதும் என் மகனே, வானத்தின்

*திறந்த வாசலை மகிழ்வுடன் கண்டு, ஆனந்தம் கொள்வாயாக!" என தொனித்த இனிய வாசகத்தை கேட்ட மாந்தர்களும் உண்டு! இந்த மேன்மையான பாக்கியமே நம் யாவருக்கும் கிட்டுவதாக! ஆமென்.*

*- Mrs.சார்லஸ் கௌவ்மென்*

---

## உத்தம பிரசங்கிக்கு, கடின வாழ்வே பாதையாகிடும்!

*சீயோன் பர்வதத்தில் கட்டப்படும் சபை*

*ஒருவருக்கு ஓரளவு பிரசங்கிக்கும் திறன் இருந்தால்கூட, தன் பிரசங்கத் திறனால், ஒரு சிறு கூட்டத்தைக் கூட்டிவிட முடியும். இவ்வாறு, எளிதில் ஜனங்களுக்குப் பிடித்த பல்வேறு கவர்ச்சியான உபதேசங்களைப் பிரசங்கித்து விட்டு.... ஜனங்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டாமலும், சரிசெய்ய வேண்டிய பகுதிகளைச் சொல்லாமலும் இருந்துவிட்டால், அந்த சபையில் இருக்கும் மக்கள் உள்ளம் மகிழ்ந்து, அந்த சபையில் திருப்தியாய் நீடித்த நாட்களாய் அமர்ந்திருப்பார்கள்!*

*இதற்கு பதிலாக, சத்தியத்தைப் பேசும் ஒரு பிரசங்கி, அதை கேட்பவர்களின் ஜீவியத்தோடு உணர்த்திப் பேசத் தொடங்கி விட்டால்.... அந்த உத்தம பிரசங்கிக்கு 'கடின வாழ்வே' பாதையாக அமையும்.... ஆனால், பரத்தின் மகிமையோ வெகு பிரகாசமாயிருக்கும்! பின்தங்கிச் செல்லும் இன்றைய சபைகளுக்கு, இதுபோன்ற உத்தம தேவ மனிதர்களே 'அவசரமாய்' தேவைப்படுகிறார்கள்!*

*இதைக்குறித்து பவுல் கூறும்போது "உங்களுக்குத் தெரிந்திருக்கிறப்படி முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு, நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய* **தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்**" *என 1தெசலோனிக்கேயர் 2:2 வசனத்தில் கூறினார். நாம் எவ்வளவு பெலவீனமாயிருக்கிறோமோ, அதைவிட தேவன் அவ்வளவு பெலன் கொண்டவர்! என நினைவுகூர்வது நம் யாவருக்கும் நல்லது. இந்த சத்தியத்தை, ஊழியத்தின் பல இன்னலான சூழ்நிலைகளில் நானும், பவுலைப்போலவே "தேவனுக்குள் தைரியப்படுத்திக் கொண்டேன்!".*

**ஆகிலும், தேவனோடு பேசி உறவாடப் பழகியவன் மாத்திரமே இவ்வித தைரியம் பெற்றிட முடியும்! நான் மனுஷரோடு பேசுவதை விட தேவனோடு அதிகம் பேசுவதை பழக்கமாக்கிக் கொண்டேன். நீண்ட கான்பரன்ஸில் கலந்துரை செய்வதை விட, தேவனோடு அதிகமாய் போராடி கலந்துரை செய்தே, தேவனுக்குள் தைரியம் கொண்டேன்!**

அதுபோன்ற சமயத்தில்தான், நான் ஆண்டவரைப் பார்த்து "ஆண்டவரே, நான் செய்ய வேண்டுமென்று அறிந்து 'அதை' நான் செய்வேனென்றால்.... நான் பேச வேண்டுமென்று உணர்ந்த 'ஒன்றை' நான் பேசுவேனென்றால்.... என் கர்த்தாவே, ஜனங்களிடமிருந்தும், சபையாய் இருக்கிற குழுக்களிடமிருந்தும் எனக்குத் தொந்தரவு வரும் என்பதை நான் அறிந்திருக்கிறேன்!" என தேவனோடு பேசினேன். இக்கட்டான இச்சமயங்களில், நான் மனக்கிலேசமடைந்து, தொடர்ந்து ஆண்டவரிடம் பேசத் தொடங்கினேன்: "ஆண்டவரே, நான் மீண்டும் உம்மிடம் இது குறித்து பேசுகிறதற்காய் வருந்துகிறேன்! என் விசுவாசத்திற்கு நான் நேர்மையான உறுதி கொண்டு நிற்கும்போது ஏராளமான துன்பங்கள் எனக்கு வரும் என்பது மாத்திரமல்லாமல்.... இந்த சூழ்நிலையில், பிசாசும் என் மீது விரோதம் கொள்வான்! எனவும் கலக்கமடைகிறேன்" இவ்வாறு, நான் மீண்டும் மீண்டும் தேவனிடத்தில் மறுவி, பேசிய பின்பு, என் உள்ளத்தில் ஓர் திடமான உறுதி ஏற்பட்டது! இப்போது, என் தளர்ந்த கால்களை நிமிர்த்தி வைத்து நின்றேன்! ஆண்டவரை நோக்கிப் பார்த்து.....

**சர்வ வல்ல ஆண்டவரே, என் கண்களுக்கு முன்பாக தெளிவாய் தோன்றும் இந்த சத்தியத்திற்கு அடிபணிந்து, அதைப் பிரசங்கித்தால் ஏற்படும் விளைவுகளை சந்திக்க ஆயத்தமாகி விட்டேன்! என்னவெல்லாம் நடக்குமோ, என்ற யூகம் எனக்கு ஏற்பட்டாலும், அதைப் புறக்கணித்து, முன்னேறிச் செல்ல அடிபணிகிறேன்......**

நான் அஞ்சி ஓடேன்! என்னை ஒளித்துக் கொள்ளவும் மாட்டேன்! ஒரு கோழையாய் ஒரு போர்வைக்குள் மடங்கி சுருண்டிட மாட்டேன். துணிவுடன் எழுந்து, 'போருக்கு' அர்ப்பணிக்கிறேன். ஏனெனில், **நான் உம்மோடு சேர்ந்து நிற்கிறேன்** என்பதை தெளிவாக அறிந்து கொண்டேன். ஆம், எனது பெலகீனமான இந்த நேரத்தில்தான் "நான் பெலன் கொண்டிருப்பதை" மனதார உணருகிறேன்!....

**இவ்வாறு நம் முழு ஜீவியத்தையும் தேவனுக்கு அர்ப்பணித்து வாழும்போதும், உள்ளம் உடைந்து தேவனோடு பேசும் போதும்.... சத்தியம் நமக்குள் ஆழமாய் வேர் கொள்கிறது!**

இவ்வாறாகவே, தேவனிடத்தில் சொல்லிமுடியா அன்பு கொண்டு வாழும் **ஒவ்வொரு சபைக்கும், ஆண்டவர் துணிவான அழைப்பை தயக்கமின்றி தருகிறார்....** "நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு, பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்!.... அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக் கொள்வேன்" என்றே கர்த்தர் சொல்லுகிறார்! **(2கொரி.6:17).** இவ்வித நேரடி அழைப்பை நெஞ்சார கேட்ட சபைகள்

*மாத்திரமே, தாங்கள் வாழும் இந்த கொடிய உலகிற்கு சமரசம் மறுத்து வாழ்வதினிமித்தம், சொல்லி முடியா 'கர்த்தரின் வல்ல கிரியைகளை' சபையில் கண்டு மகிழ்வார்கள்!*

**ஒரு தூய சபை, உலகத்திற்கு ஒத்தவேஷம் மறுத்து எவ்வளவு முரணாக எழுந்து நிற்கிறதோ, அதைக் கொண்டே அந்த சபையின் வலிமையை கணக்கிட முடியும்!**

*இவ்வாறு 'சத்தியத்தின் உறுதிக்கு' துன்பம் ஏற்படும் என்ற போதகம் வேதத்தில் மிகத் தெளிவாகவே இருக்கிறது! சபை சரித்திரத்திலும் திருஷ்டாந்தமாய் இருக்கிறது! ஆனால், அந்த உத்தம திருஷ்டாந்தத்தைப் பின்தொடர்ந்து வரும் 'சபைகளைத்தான்' இன்று காண அரிதாய் இருக்கிறது!*

*அவ்வித உசிதமான திருஷ்டாந்தங்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை போலும்.... எவ்வளவு முடியுமோ, அந்த அளவிற்கு இன்றைய சபைகள் சத்தியத்திற்கு முரணாக உலகத்தோடு இசைந்து போவதுதான் கொடுமையிலும் கொடுமையாயிருக்கிறது!*

*இவ்வித சபைகள் எப்போதாவது உலகத்தைக் குறித்துப் பேச முற்பட்டால், "ரொம்ப மோசமான பாவங்களுக்கு நாம் விலகி நிற்க வேண்டியதுதான்! 'முழு அளவில்' நாம் உலகமாய் மாறிவிடக் கூடாதுதான்...." என்றெல்லாம் மழுப்பி பேசத் துவங்கி விடுகிறார்கள்!*

*சபை மாந்தரே கேளுங்கள்: "நம் சபைகளை சீயோன் பர்வதத்தில் கட்டுவோமாக! இந்த உலகத்தை துணிவுடன் ஏறிட்டு நின்று 'உலகமே! நாங்கள் நிற்கும் பர்வதம் ஏறி வாருங்கள்!' என்றே அழைப்பு கொடுப்போமாக! இதற்கு மாறாக 'எவ்வித கொடிய சூழ்நிலையிலும்' உலகத்திற்குள் நாம் இறங்கிவிடாதிருப்போமாக!" நம் கிறிஸ்தவத்தின் சிங்காரமே சிலுவைதான்:*

**அந்த சிலுவையின் முழக்கமோ, மரித்து வாழுங்கள்! பிரிந்து வாழுங்கள்! ஒருபோதும், ஒருபோதும் ஒத்த வேஷத்திற்கு சமரசம் சேராதிருங்கள்! என்ற முழக்கமேயாகும். சிலுவையைக் கண்டடைந்தவர்களில் ஒருவர் கூட, ஒத்த வேஷத்திற்கு தாழ்ந்தது இல்லை!!**

*மெய்யான சிலுவை, ஜீவனுக்கும் மரணத்திற்கும் உறுதியான பிளவை ஏற்படுத்தும். இதைக் காணும், பயந்து வாழும் கோழைகள் "இது அதிக பட்சம்!" எனக் கூக்குரலிடுகிறார்கள். கோழைகளின் இந்த கூக்குரல், மெய்யாகவே சரிதான். ஏனெனில், இந்த பாருலகில் 'சிலுவை மாத்திரமே' அதிகபட்சத்தின் உச்சக்கட்டம்! இதைத்தவிர வேறொன்றல்ல, சிலுவையே முடிவானது!*

*கிறிஸ்துவின் இந்த மெய்யான சிலுவையின் உபதேச அழைப்பு, மரணத்திலிருந்து ஜீவனுக்கும்! சீரழியும் பாவத்திலிருந்து நீதிக்கும்! வஞ்சக சாத்தானிடமிருந்து தேவனுக்கும்! அழைத்திடும் அழைப்பாகவே, அன்றும்... இன்றும் நிலைத்திருக்கிறது!! ஆமென்.*

*- A.W.டோசர்*

---

## நிந்தைகளில், என்னை ஆதரித்த கர்த்தரின் கரம்!

*விரோதங்களில் கர்த்தரை அண்டிக்கொள்வதே நலம்*

**நா**ன் ஜெனிவா பிஷப் அவர்களிடம் நேரடியாகப் பேசிய பிறகு, நல்ல உள்ளத்தோடு அவைகளை ஏற்றுக்கொண்டார்:

> *ஆனால், அவரைச் சூழ்ந்திருந்த மற்றவர்கள் பலவாறாக என்னைக் குறித்து பேசியதை நம்பி குழப்பமடைந்தார். நான் பிரான்ஸில் உள்ள தந்தை லா -மோத்தே அவர்களுக்கும் கடிதம் எழுதினேன். நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதுவும் பலன் அளிக்கவில்லை. 'காரியம் சீராகிவிடும்' என்ற நம்பிக்கையோடு நான் எவ்வளவு முயற்சி செய்தேனோ, அவ்வளவுக்கு அதிகமாய் 'ஜெனிவா மடத்து பிரசங்கி' குழப்பம் செய்துவிட்டார்! ஆகவே, இனிமுதற்கொண்டு காரியம் சீர்ப்படுத்த நான் முயன்ற பிரயாசங்களை நிறுத்திக்கொண்டேன்! அடுத்த வாரத்தில், ஜெனிவா மடத்தில் எனக்குப் பிரியமாய் இருந்த வாலிபமான அந்த கன்னியாஸ்திரீயையும் 'இந்த பிரசங்கியானவர்' எனக்கு விரோதமாய் மாற்றி விட்டார் என அறிந்து மிகவும் வருந்தினேன். அந்த அன்புள்ள கன்னியாஸ்திரீயை கிறிஸ்துவுக்குள் பலப்பட செய்திட அதிகமான விலைக்கிரயம் செலுத்தியிருந்தேன். ஒருவேளை, என்னுடைய ஒரு குழந்தை மரித்திருந்தால் கூட இவ்வளவு வருத்தமடைந்திருக்க மாட்டேன். அந்த வருத்தத்தைவிட மேலாய் இந்த வாலிப கன்னியாஸ்திரீ குழப்பமடைந்ததை கேள்விப்பட்டு வெகுவாய் வருந்தினேன்!*
>
> **இச்சமயத்தில், இந்த பிரசங்கி ஏற்படுத்திய தடையை உடைத்து முன்னேறும்படியான வழிமுறைகளை சிலர் என்னிடம் கூறினார்கள். ஆனால், மனுஷீகமான இவ்வித முயற்சியை 'வெறுக்கத் தகுந்ததாய்' என் உள்ளத்தில் உணர்ந்தேன்.**

இந்நிலையில், எனக்குள்ளிருந்து மேலோங்கி வந்த கர்த்தருடைய வார்த்தை என்னவெனில் "கர்த்தர் வீட்டை கட்டாராகில்....." என காண்பித்த வெளிச்சமேயாகும்! எப்படியெனில், கர்த்தரே அவளுக்கு சகாயம் செய்து, வஞ்சகமாய் செயல்பட்ட 'அந்த பிரசங்கியின்

*மற்றும் அவரோடு சேர்ந்தவர்களின்' கேடான பல திட்டங்களை கர்த்தரே முறியடித்ததை கண்டிருக்கிறேன். நான் ஜெனிவாவில் அவளோடிருந்த காலங்களிலெல்லாம், 'தலைமை அதிகாரங்களின்' தீய அச்சுறுத்தலுக்கு பயம் கொண்டவளாயிருந்தாள். அவ்வித பயத்தால், தனக்கென்று ஓர் உறுதியான நிலைப்பாட்டை தெரிந்து கொள்ளமுடியாமல் தத்தளித்தாள்! இங்கும் கர்த்தருடைய அளவில்லா நன்மைகளை நான் ருசிபார்த்தேன். அன்று, கர்த்தருடைய ஆதரவு எங்களுக்கு இல்லாதிருந்தால், நிச்சயமாய் நானும் கூட மனச்சோர்வில் தோற்றுப்போயிருப்பேன். ஆகிலும், கர்த்தருடைய ஏற்ற வேளையில் அவளை விட்டுப் பிரியும் சூழ்நிலையை கர்த்தரே உருவாக்கினார். ஆனால், அந்த வாலிப கன்னியாஸ்திரீயோ தன் உறுதியற்ற நிலையிலேயே இருந்துவிட்டாள்!*

*இப்போது, கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் புதிதான தீமைகளை என்மீது சுமத்தினார்கள். அவைகள் எனக்குப் புதிதானது மாத்திரமல்லாமல், நான் சற்றும் எதிர்பாரததாயிருந்தது! அந்த புதுவழி கத்தோலிக்க அமைப்பாளர்கள், ஜெனிவா பிஷப்பின் தூண்டுதல் மூலமாக! அந்த தீமையான பிரசங்கியின் தூண்டுதல் மூலமாக! 'ஜெக்ஸ்' (Gex) கன்னியாஸ்திரீ சகோதரிகள் மூலமாக! மடத்திலுள்ள நல்ல தெய்வ பக்தியாளர்கள் அனைவரையும் பாதிப்படைய செய்து, எனக்கு விரோதம் செய்தார்கள். நானோ, 'மனசஞ்சலம்' என்ற குழிக்குள் விழாவிட்டாலும், என் இருதயத்தில் வேதனையடைந்தேன் என்பது உண்மைதான். அந்த வேதனை கூட பெரும்பாலும் தந்தை-லா- கோம்பே அவர்களின் நற்பெயரை கெடுப்பதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட தீமைகளேயாகும். அவரை* **நேருக்கு நேர் சந்திக்காமலே தீமை பல பேசியது விந்தையாயிருந்தது.** *அவரது முதுகுக்குப் பின்னாக இருந்துகொண்டு, பிரான்ஸ் தேசத்தில் அவர் செய்த அநேக பக்தி ஊழியங்களையும் ஏராளமான சுவிசேஷப் பணிகளையும் 'தலைகீழாய் கவிழ்த்துப் போட்டது' மகா கொடியதாயிருந்தது! மிகுந்த ஆத்திரமுடன் அவருடைய நியாயத்தை எடுத்துரைக்க நான் நினைத்த செயல் 'நீதியாயிருக்கும்' என்றே எண்ணினேன்.*

**ஆனால், "என்னை நியாயப்படுத்தும் செயலை" இதுவரை நான் செய்ததில்லை! ஆகவே "அவரை நியாயப்படுத்தும் செயலையும்" நான் செய்யாதிருக்கும்படியே கர்த்தர் என்னோடு பேசினார்!**

*இவ்வாறாக, தந்தை லா- கோம்பே அவர்கள், முற்றிலுமாய் தேவன் மூலமாக நொறுக்கப்படுவதற்கு விட்டு விடுவதே சிறந்த செயலாய் இருக்க முடியும் என கர்த்தர் உணர்த்தினார். அவருடைய எண்ணற்ற*

ஊழியங்கள் மூலமாய் கர்த்தர் மகிமைப்பட்டதைக் காட்டிலும் முற்றிலும் நசுக்கப்படும் இவ்வேளையில் "கர்த்தரிடமிருந்து அதிக மகிமையைப் பெறுவார்!" என்பதை நான் தெளிவாய் உணர்ந்தேன்.

- மேடம் குயான்

---

## 'ஆக்கினை இல்லாத' இயேசுவின் மலைபிரசங்கம்!

*கைக்கொள்ளத் தூண்டும் இயேசுவின் போதனை*

இயேசுவின் மலைபிரசங்கம், சீனாய் மலையின் உபதேசம் அல்ல! 'சீனாய் மலையை' அது வழங்கிய ஆக்கினையை, மோசேகூட பயந்து நடுங்கும்படி பயங்கரமாயிருந்தது! (எபி.12:20,21). இன்றும், மனுஷீக சிந்தை கொண்ட சில ஊழியர்கள், மலைப்பிரசங்கத்தை விரிவாய் பிரசங்கித்து, கிறிஸ்துவின் ஆவிக்கு முரணாய், ஆக்கினை தீர்க்கும் மொழிகளாய் மாற்றியிருக்கிறார்கள்!

*இயேசுவோ, தமது உபதேசத்தை ஆசீர்வாதத்தோடு ஆரம்பிக்கிறார்! பாக்கியர் இன்னார் என்பதை விளக்கிக் காட்டுகிறார். யார் பாக்கியர்? யார் தெய்வத்தைத் தரிசிப்பார்கள்? யார் தேவராஜ்யத்துக்குரியவர்கள்? யாருக்கு ஆறுதலும், சமாதானமும், திருப்தியும் கிடைக்கும் என்றெல்லாம் காண்பிக்கிறார்! உலகத்தார் நம்மை பாக்கியம் என்று சொல்வதற்கும், நம் இரட்சகர் நம்மை பாக்கியம் என்று சொல்வதற்கும் எவ்வளவு வித்தியாசம்!*

எல்லாவற்றையும் விட்டு, என்னை நீங்கள் சேர்ந்துகொண்டதால், என்னிமித்தம் உங்களுக்கு பாடுகளும் நிந்தைகளும் வரும்! ஆனால், சோர்ந்து போக வேண்டாம்! அத்தனையும் உங்களுக்கு ஆசீர்வாத பலனாக முடியும்!

**இப்படியெல்லாம் நற்செய்தி வழங்கிட இயேசுவைப்போல் அனேகரில்லையே! வேதபாரகர் பரிசேயரைப்போல் வெறும் போதனை செய்கிறார்களாயிராமல், இயேசுவைப்போலவே, உங்கள் போதனையோடு பரிவும் சவாலும் சேர்ந்திருக்க வேண்டும்.**

ருசியற்ற மனுஷருடைய ஜீவியத்துக்கு, நீங்கள் உப்பைப்போல் சாரமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றார்! அகத்தின் இருளைப் போக்குவதற்கு நீங்களே வெளிச்சமாயிருக்க வேண்டும்! நீங்கள் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஈவுகளை, மறைத்துவைக்கக் கூடாது! மற்றவர்களுக்கு நீங்கள் 'ஆசீர்வாதமாயிருப்பதற்காகவே' உங்களைத் தெரிந்துகொண்டேன்! பரமபிதாவுக்கு மகிமைவரும்படி **உங்கள் ஜீவியம், பிரகாசிக்கும் வெளிச்சம்** போலிருக்கட்டும்!

*என்றெல்லாம் மிகுந்த பரவசத்தோடு கூறினார்!*

*மேலும் நம் நல்ல போதகர் கூறும்போது, "என் உபதேசம் புதிதாய் (புதுரசமாய்) இருப்பதால், நியாயப்பிரமாணத்துக்கு விரோதம் என்று நீங்கள் பயப்பட வேண்டாம்! நியாயப்பிரமாணத்திலும் 'மேலானவைகளையே' நான் உங்களுக்குப் போதிக்கிறேன். கொலைதான் பாவம் என்று நினைக்க வேண்டாம். கோபமும் மூர்க்கமும் பாவமாகும்!* **பகைக்கு இடங்கொடுக்கவே கூடாது!** *விபச்சாரந்தான் பாவம் என்று நினைக்க வேண்டாம்.* **துர்இச்சையே** *பாவமாகும்! உன் கண்ணைப்போல், உன் கையைப்போல் எவ்வளவு அருமையாகத் தோன்றினாலும், அப்படிப்பட்ட சோதனைகளுக்கு இடங்கொடுக்க வேண்டாம்.*

**விவாகம் பரிசுத்த தேவ ஏற்பாடு! தள்ளுதலும் பிரிந்திருப்பதும் பாவமும் பாவத்துக்கு தூண்டுதலுமாகும்!**

*ஆணையிடுகிற (சத்தியம் செய்கின்ற) வழக்கம் நல்லதல்ல. 'எப்போதும்' உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் உரைக்கக்கடவீர்! "வலியச் சண்டைக்குப் போகமாட்டேன், வந்த சண்டையை விடவும் மாட்டேன்" என்கிற சபதம் உங்களுக்கு வேண்டாம். தீமையோடு எதிர்த்து நிற்பதைவிட, தீங்கை அனுபவித்துக்கொள்வதே பாக்கியம்!*

*உன்னால் நன்மைபெற விரும்புகிறவனுக்கு, உன்னால் கூடியமட்டும் நன்மை செய்! பதிலுக்கு நன்மை கிடைக்கும் என்ற நோக்கமாகச் செய்யாதே. சிநேகிக்கிறவர்களையே சிநேகிப்பது அவ்வளவு விசேஷமல்ல. எல்லாருமே அப்படிச் செய்கிறார்கள், அல்லவா?:*

**நன்மைக்கு நன்மை செய்வது மனுஷீகம்! நன்மைக்குத் தீமை செய்வது பிசாசு! தீமைக்குத் தீமை செய்வது மிருகம்! தீமைக்கு நன்மை செய்வதோ தெய்வீகம்! என்றல்லலவோ நம் போதகர் அழகுபட போதித்தார்!**

*நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும் நன்மை செய்கிற உங்கள் பிதாவை நினைத்துக்கொள்ளுங்கள். அவர் சுபாவம் உங்களிலிருக்கும்போது, நீங்கள் அவருக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள். ஏன், நீங்கள் பரமபிதாவின்* **பூரண சற்குணத்தையும்** *பெற்று மகிழ்வீர்கள்! இவரே நம் உள்ளம் கவர்ந்த போதக பெருமான்! இன்றும், பரமபிதாவின் இனிமையான பூரண சற்குணத்தை, இயேசுவைப்போலவே ருசித்தவர்கள், தங்கள் போதனையில் இயேசுவின் இனிமையை காத்துக்கொள்கிறார்கள்!*

*- பரமானந்தம் ஐயர்*

## தன் இளமையில் பில்லிகிரஹாம்!

*தம்முடையவர்களை தமதாக்கிடும் கர்த்தர்*

குதிரை ஓட்டத்தில் ஆர்வம் கொண்ட மிடுக்கான வாலிபர்தான் *பில்லிகிரஹாம்.* அவர் வீட்டில் இருந்த பணிப்பெண் **சுசீ என்ற கருப்பு அமெரிக்க பெண்மணி, ஜெப வாஞ்சை கொண்டவள். 6**அடி **2**அங்குலம் உயரமான பில்லியோடு தாராளமாய் பேசுவாள். அவள் வேலை செய்து கொண்டே கர்த்தரைப் பாடி மகிழ்வாள். பில்லியோடு பிறந்த மூன்று பிள்ளைகளையும் சுசீ அதிகம் நேசித்து, வேண்டிய உதவி செய்வாள். அந்நாட்களில் வெள்ளை அமெரிக்கர்கள், கருப்பு அமெரிக்கர்களை வேலைக்கு அமர்த்துவார்கள். கருப்பு அமெரிக்கர்கள் அனைவருமே வெள்ளை அமெரிக்கவினருக்கே பணி செய்வார்கள்.

அன்று, பேஸ்பாலை ரசித்து விளையாடி விட்டு, பில்லி வீட்டிற்குத் திரும்பிய சமயம் சுசீ சோகமாய் அமர்ந்திருந்தாள்: "உன் அப்பா *கிரஹாமுக்கு* ஓர் விபத்து நடந்துவிட்டது. அப்பாவோடு அம்மாவும் மருத்துவமனையில் இருக்கிறார்கள். உன் அப்பா பெரிய மரத்துண்டை வெட்டும்போது அந்த மரத்துண்டு வேகமாய் அப்பாவின் தலையில் அடித்து, தலையை பிளந்து விட்டது. அப்பா பிழைப்பது கடினம்" என அழுது கொண்டே கூறினாள்..... "பில்லி, நான் ஜெபத்தை கைவிடாமல் இந்த நிமிடம் வரை ஜெபித்துக்கொண்டிருக்கிறேன்" எனவும் தெரிவித்தாள்!

**ஜெபத்தில் ஆர்வம் இல்லாத பில்லி, பணிப்பெண் சுசீயை பார்த்து "தயவுசெய்து உங்கள் ஜெபத்தை நிறுத்திவிடாதீர்கள்" என கண்கலங்கினார்.**

டாக்டர்கள், நம்பிக்கை இல்லையென கை விரித்த நிலையில் *பில்லியின் தாய்* "நிச்சயமாய் இல்லை, அவர் பிழைத்து விடுவார்" எனக்கூறி, தன் ஜெபக் குழுவிலிருந்த அனைத்துத் பெண்களையும் அழைத்து தீவிரமாய் ஜெபித்தார்கள். சில நாட்களில், ஆச்சரியமான பூரண சுகத்தோடு, கிரஹாம் வீட்டிற்குத் திரும்பினார்.

அன்று மாலை வேளையில், "பில்லி, ஓர் சுவிசேஷ கூட்டத்திற்குச் செல்கிறேன். நீயும் வா" என்று அப்பா அழைத்தார். 'நான் வரமாட்டேன்' எனக் கூறிய பில்லியிடம் "இந்த பிரசங்கி வெறும் பேச்சாளி மட்டுமல்ல, **வாழும் உத்தம கிறிஸ்தவர்**" என கூறியதைக் கேட்டு, அந்தக் கூட்டத்திற்கு பில்லி சென்றார். ஆகிலும் அந்த அரங்கத்தின் கடைசி வரிசையில் போய் அமர்ந்து கொண்டார்.

**பாவத்தைக் குறித்தும், இரட்சிப்பைக் குறித்தும் அந்த பிரசங்கி பேசிய போது "பரத்திலிருந்து வந்த சத்தமாய்" பில்லியை உணர்த்தி, இரட்சகரிடம் கதறும்படி செய்துவிட்டது!**

*அந்த நாளில், தன்னை முழுமையாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்தார். தன் 17-ம் வயதில் இரட்சிக்கப்பட்ட வாலிபனாகிய பில்லி, இரண்டு வருடம் கழித்து, ஒரு வாலிபகூட்டத்தில் பேசும்படி அழைக்கப்பட்டார். எந்தவித கவர்ச்சியான வாசகமும் இல்லாமல், ஓர் எளிமையான சுவிசேஷ செய்தியை அன்று இரவு பிரசங்கித்தார்.*

*அதைத் தொடர்ந்து, தன் ஜீவ காலமெல்லாம் பல நாடுகளுக்குச் சென்று சுமார் ஒருகோடி ஜனங்களுக்கு இயேசுவை இரட்சகராக அறிவிக்கும் அற்புத ஊழியம் இருந்ததை அந்த முதல் கூட்டத்தில் 19- வயதான அந்த வாலிபன் அறியவில்லை. பிற்காலங்களில், பில்லிகிரஹாமை உங்களுக்குத் தெரியுமா? என்று யாரும் கேட்பதில்லை! அதற்கு பதிலாய் "பில்லிகிரஹாம் பிரசங்கத்தை கேட்டிருக்கிறீர்களா?" என்றே கேட்கும் அளவிற்கு பல இலட்சம் மக்களை கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்தார்!*

*1960-ம் ஆண்டு: வெள்ளை அமெரிக்கர்கள், கருப்பு அமெரிக்கர்கள் என, கொடிய பிரிவினை அமெரிக்காவில் தாண்டவமாடியது. கருப்பு அமெரிக்கர்களுக்கு தனி கூடுகை! தனி சபைகள்! தனி வியாபார ஸ்தலங்கள்! என்ற பிரிவினை ஆகோரத்தால் கலகங்கள் மூண்டு, அநேக கருப்பு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டார்கள். சில வருடங்கள் நீடித்த இந்தக் கொடுமை சற்று ஓய்ந்தது.*

*கிட்டத்தட்ட தன் 100-வது வயதில் பண்டிதர் பில்லிகிரஹாம் மரித்தாலும் அவருடைய "***பில்லிகிரஹாம் குருசேடு அல்லது நற்பணி இயக்கம்***" ஆலமரம் போல் நிலைத்திருக்கிறது. அமெரிக்க ஸ்தாபகங்களில் பில்லி கிரஹாம் ஊழிய ஸ்தாபகம் மிகப்பெரிய ஒன்றாகும்!* **அவருடைய ஸ்தாபகத்தில் பாதிக்குப் பாதி கருப்பு அமெரிக்கர்கள்** *ஊழியம் செய்கிறார்கள். ஜெபத்தின் வலிமையை ஊக்குவித்த 'அவருடைய வீட்டு கருப்பு அமெரிக்க பணிப்பெண்' சுசீ சகோதரி பில்லிகிரஹாம் நற்செய்தி குழுவில் மகிழ்வுடன் ஊழியம் செய்து வருகிறார்கள்! பில்லிகிரஹாம் நற்பணி இயக்கத்தில் இன்றும் அநேகர் இணைந்து ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் அனைவரும் தெய்வ பயம் நிறைந்த பரிசுத்தவான்களாய் நிலைத்திருந்து ஊழியம் செய்வதே அவரின் குழுவைக் குறித்த மகத்துவமாகும். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!*

*- பண்டிதர் பில்லிகிரஹாம் USA*

## ‘விசுவாச தைரியத்தை’ கனப்படுத்தும் ஆண்டவர்!

*உயிருள்ள விசுவாசமே ஜீவன் தரும்*

**சு**விட்சர்லாந்து சுகமளிக்கும் பொதுகூட்டத்தில், ஜெபிப்பதற்கு ஜனங்களை அழைத்தார் விக்கிள்ஸ்வொர்த். அச்சமயத்தில், ஒரு இளம்பெண் தன் முகம் முழுவதும் ‘கட்டிகள் பெரிதாகி தொங்க’ மேடைக்கு ஏறி வந்தாள். அவளை மேடையின் நடுவே நிறுத்தி, “புற்றுநோய் வியாதியால் அகோர முகமாகிப் பாதிக்கப்பட்ட இந்தப் பெண்ணை எல்லோரும் பாருங்கள்! இப்போது நான் ஜெபித்தவுடன் புற்றுநோயின் வேர் செத்துவிடும். நாளை இவள் இதே மேடையில் வந்து நிற்பாள்! அப்போது இவள் பூரண சுகம் அடைந்ததை நீங்கள் எல்லோரும் காண்பீர்கள்” என கூறிவிட்டு, அவள்மீது கைவைத்து சுகத்திற்காக ஜெபித்தார்! தலையில் எண்ணெய் பூசி இந்த கொடிய வியாதி, அவளை விட்டு நீங்கும்படியாய் கட்டளை கொடுத்தார்.

‘புற்றுநோய் வியாதி’ சாத்தானின் அழிவுக்குரிய கிரியை என விக்கிள்ஸ்வொர்த் அடிக்கடி கூறுவார். ஜெபித்து முடித்தவுடன், மாற்றம் எதுவும் நிகழவில்லை! விக்கிள்ஸ்வொர்த் அவளை பார்த்து “நாளை மாலை இந்த மேடையில் நீ வந்து, சுகம் பெற்றதை அறிவித்து தேவனை மகிமைப்படுத்து” என கூறி அனுப்பிவிட்டார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அருவருப்பான முகத்தோற்றம் கொண்ட அந்த பெண்ணை நன்கு அறிந்த ஊரார், ‘நாளை என்ன நடக்குமோ?’ என ஆச்சரியப்பட்டார்கள்! நாளையும், அன்று மாலையும் வந்தது! ஜெபவேளையும் வந்தது! எத்தனையோ சுகம் அடைந்த சாட்சிகள் கூறப்பட்டது. புற்றுநோய் வியாதியால் பாதிக்கப்பட்டு விக்கிள்ஸ்வொர்த் ஜெபம் ஏறெடுத்த அந்தப் பெண்ணும் கெம்பீரமாய் நடந்து மேடையின் நடுவில் நின்றாள். **அகோர முகம் கொண்ட அந்தப் பெண் பிரகாச முகத்தோடு** அழகுற நின்றதைக் கண்டு பெரும் திரளான கூட்டம் கர்த்தரை மகிமைப்படுத்தி, ஆரவாரித்தது! புற்றுநோய் இருந்த சிறிய வடுகூட அவள் முகத்தில் காணப்படவில்லை! அந்த மேடையில் விசுவாசம் மாத்திரமல்ல, விக்கிள்ஸ்வொர்த்தின் “விசுவாச தைரியம்” வெளிப்பட்டதை ஜனங்கள் கண்டார்கள்!

மற்றொரு சம்பவம், சுவிட்சர்லாந்து சுகமளிக்கும் கூட்டத்தி லேயே நடந்தது! கிறிஸ்தவர்களிலும் நாத்திகர்கள் பலர் உண்டு. சுவிட்சர்லாந்தில் பிரபல்யமான பல் மருத்துவராய் டாக்டர் எமில் இருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவ நாத்திகவாதி! அன்று சாட்சி நேரத்தில் இந்த பிரபல்ய பல் டாக்டர் எமில் மேடையில் வந்து நின்றார். டாக்டர்

எமில் கணக்குப்படி, வயதான ஊழியர் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களும் ஈறுகளும் அரித்து நோய்பட்டிருக்கும் என எண்ணினார். "சுகமளிக்கும் இவரின் பற்களையும் ஈறுகளையும் நான் சோதிக்க இடம் தருவீர்களா?" என கேட்டவுடன், ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் மகிழ்ச்சியுடன் முன் வந்து நின்றார். கூட்டத்தில் சற்று சலசலப்பு ஏற்பட்டது! சில நிமிடங்கள் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களையும் ஈறுகளையும் சோதித்துப் பார்த்த டாக்டர் எமில், வெட்கத்தோடு முகம் கவிழ்ந்து "தேவ ஊழியர் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களும் ஈறுகளும் பூரண ஆரோக்கியத்துடன் திடமாய் இருக்கிறது" என அறிவித்தவுடன், மக்கள் கர்த்தரை கரகோஷம் செய்து மகிமைப்படுத்தினர்! அன்றுமுதல், டாக்டர் எமில் விக்கிள்ஸ்வொர்த்தின் பெந்தெகொஸ்தே சபையில் முழு அர்ப்பணம் கொண்ட கிறிஸ்தவராய் மாறிவிட்டார். வெறும் 15 பேர் மாத்திரமே இருந்த சபையில் டாக்டர் எமில் மனந்திரும்பி வந்தவுடன், சில நூறு ஜனங்களை கர்த்தர் சபையில் சேர்த்துக் கொண்டார். அவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டது மாத்திரமல்லாமல் **பரிசுத்தாவியினால் நிறைந்திருக்கும்படி** விக்கிள்ஸ்வொர்த் நடத்தினார்.

விக்கிள்ஸ்வொர்த்தின் **விசுவாச தைரியத்திற்கு** மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு சுகமளிக்கும் கூட்டத்தில், பிரபல்யமான சில மருத்துவர்கள், **இயற்கை விதிக்கு அப்பால் சுகம் பெறுவது சாத்தியமில்லை** எனக்கூறி விக்கிள்ஸ்வொர்த்தின் மீது புகார் செய்தார்கள். அவரை கைது செய்து விசாரணைக்கு அழைத்துவர சில இன்ஸ்பெக்டர்கள் அனுப்பப்பட்டார்கள்.

சற்றும் எதிர்பாரத விதத்தில் போலீஸ் அதிகாரிகளின் மத்தியில் ஒரு பெண் வந்து நின்றாள். "அதிகாரி அவர்களே, இந்த ஊரில் கொடிய போதையில் கலகம் செய்யும் பெண்மணி நான்! என்பது, உங்கள் அனைவருக்கும் தெரியும். இப்பொழுது பாருங்கள், எனக்காக இந்த விக்கிள்ஸ்வொர்த் ஊழியர் ஜெபித்தார். என் இரத்தத்தோடு கலந்திருந்த குடிப்பழக்கத்தை நீக்கி, தேவன் என் ஆத்துமாவை இரட்சித்து விட்டார்! குடிப்பழக்க அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றேன்" என கூறியவுடன்....

அங்கு வந்திருந்த போலீஸ் சீனியர் ஆபிஸர் ஒருவர் "இந்த தேவ ஊழியரின் ஊழியத்தை இடையூறு செய்ய என்னால் முடியாது. நீங்கள் வேண்டு மானால் இவரை கைது செய்யுங்கள்" எனக் கூறி, விலகி நின்றார். ஜனங்கள் மகிழ்வுடன் தேவனை துதித்தார்கள்!

*- ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

## 'தீவிர ஊழிய எழுப்புதல்' இன்றைய சபையின் தேவை!

*சுவிசேஷ பணி நம் அனைவரின் பொறுப்பு*

ஓர் 'அவசரநிலை பிரகடனமே' கிறிஸ்தவர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது! சத்துருவாகிய பிசாசு, அநேக கிறிஸ்தவர்களுடைய ஜீவியத்தை சீர்க்குலைத்து, அவர்களின் ஊழிய ஆர்வங்களை முடமாக்கி யுள்ளான். அன்று எருசலேமின் அலங்கமும், அங்கிருந்த ஆலயமும் உடைபட்டு கிடந்ததைப் போன்ற சூழ்நிலையே இன்றைய நம் சூழ்நிலை. இப்படிப்பட்ட காலத்தில், நாம் ஒன்றும் செய்யாமல் சொகுசாய் இருப்பது சரிதானா? இக்காலத்தில், நாம் சோம்பலுக்கு இடம் தரக் கூடாது!

**நம்மில் ஒவ்வொருவரும் 'கலப்பையில்' கண்டிப்பாய் கை வைத்திட வேண்டும்! தனக்குரிய பொறுப்பிலிருந்து ஒருவரும் பின்வாங்கிட கூடாது!**

அப்படி ஒரு செயல் தீரமே *எஸ்றா, நெகேமியா* தலைமையில் "எருசலேமின் அலங்கமும் ஆலயமும் செப்பனிடும் பணியில்" இருந்ததை காண்கிறோம். அவ்வாறு, அவர்கள் எல்லோரும் இணைந்து பணியாற்றிய செயல் நம் கண்களுக்கு விந்தையாகவேயிருக்கிறது:

1. "பிரதான ஆசாரியனாகிய *எலியாசீபும்* அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து ஆட்டுவாசலை கட்டினார்கள்" (நெகேமியா 3:1). பிரதான ஆசாரியன் எப்போதுமே விலையுயர்ந்த தையலாடையில்தான் இருப்பார். அன்றோ, தன் அந்தஸ்தான ஆடையை அவர் கழற்றி வைத்து விட்டு, கொத்தனார் பிடிக்கும் கரண்டியை எடுத்துக்கொண்டு பணியில் இறங்கினார்!
2. "தட்டாரில் (தங்க ஆசாரி) ஒருவனாகிய *ஊசியேல்* பழுதுகளை சரிபார்க்க சென்றார்" (நெகே.3:8). தங்கத்தையும், வைரத்தையும், வைடூரியத்தையும் வைத்து நுணுக்கமாய் பணிசெய்த அவர்கள், இப்போது கரடுமுரடான கற்களின் நடுவில் நின்று பாடுபட வந்துவிட்டார்கள்!
3. "தைலக்காரரில் (விலையேறப்பெற்ற வாசனை திரவிய வியாபாரி) ஒருவனாகிய *அனனியா*" (நெகே.3:8) ஆலய பழுதுபார்க்க வந்து நின்றார். விலையேறப்பெற்ற வாசனை தைலத்தை அழகான சிறுசிறு பாட்டில்களில் நிரப்பி வைக்கும் பணிகொண்டவர், ஒரு கையில் தண்ணீர் வாளியையும், மறு கையில் சுண்ணாம்புக்காரை வாளியையும் எடுத்துக்கொண்டு முன் சென்றார்!
4. எருசலேமின் பாதி பட்டணத்திற்கு தலைவனாய் இருந்த *ரெப்பாயா,* இப்போது எருசலேமின் அலங்கத்தை செப்பனிட பணிதளம் இறங்கினார்" (நெகே.3:9). மாவட்ட ஆட்சியாளருக்கு

ஒப்பான (கலெக்டர்) இந்த புருஷர்கள், நிர்வாக வேலைகளை கவனிக்கும் அலுவலகத்தில்தான் பொதுவாய் அமர்ந்திருப்பார்கள். இப்போது அவர்கள் "இதெல்லாம் இழிவான வேலை" என அழைக்கப்பட்ட பணியை கர்த்தருக்காக செய்திட, வெட்ட வெளிக்கு வந்துவிட்டார்கள்!

5. "தட்டாரும், மளிகைக்காரரும் (வியாபாரிகளும்)" பணிகளம் இறங்கினார்கள் (நெகே.3:32). கொள்முதல் செய்வதும் விற்பனை செய்வதுமாகிய இந்த வியாபாரிகள், தங்கள் ஆசனத்தை விட்டு எழுந்து வந்து, ஆலயத்தில் பழுது நீக்கும் பணி செய்தார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தலைவனாகிய நெகேமியாவும் பணிகளத்தில் பாடுபட வந்தார். நெகேமியா தன்னுடைய சாட்சியாக கூறுகையில் "நானாகிலும், என் சகோதரராகிலும், என் வேலைக்காரராகிலும், எங்கள் வஸ்திரங்களை களைந்து போடாமல், அவரவர் தண்ணீர் கொண்டு நாங்களே துவைத்துக்கொண்டோம்!" (நெகே.4:23) என்றார். அன்று எருசலேமில் நடைபெற்ற தெய்வ பணிகளத்தின் தீவிரம் என்னவென்றால் "**ஜனங்கள் வேலை செய்கிறதற்கு, ஆவலாய் இருந்தார்கள்!**" என்ற உற்சாகமேயாகும்!

இதுவே, ஆதி சபையின் ஊழிய கட்டமைப்பாக இருந்தது. சபையை தாக்குவதற்கு பல்வேறு துன்பங்களை கர்த்தர் அனுமதித்திருந்தார்! ஆனால், **கர்த்தரின் நோக்கம்** நிறைவேறியதையே அப்போஸ்தல நடபடிகள் 8-ம் அதிகாரத்தில் காண்கிறோம்: "அக்காலத்திலே எருசலேமில் உள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்.... **சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்**" (அப்.8:1,4). இவ்வாறு, எல்லா விசுவாசிகளும் கர்த்தருடைய சுவிசேஷப் பணிக்கு முன்சென்றிட 'சபையில் உபத்திரவ சூழ்நிலையை' தேவன் அனுமதிக்க வேண்டியதாயிருந்தது! அவ்வாறு நடக்காவிட்டால், அவர்கள் முன்னால் நின்று பாடுபடும் அப்போஸ்தலர் மீதே சுமை ஏற்பட்டு விடும். இன்றும்கூட "சுவிசேஷ பணியானது" அழைக்கப்பட்ட முழு நேர ஊழியர்கள் மீதே விழுந்துகிடக்கிறது! அன்று சபையில் எழுப்புதல்தீ உண்டான காலங்களில் "**ஒருவன், ஒருவனை ஆதாயம் செய்திட வேண்டும்!**" என்ற ஊழிய முழக்கத்தை இன்றைய கிறிஸ்தவ சபை மக்கள் மறந்துவிட்டார்கள்! இவ்வாறு சம்பவிப்பது சரிதானா? சபையில் உள்ள நாம் அனைவருமே எழுந்து பிரகாசிக்கக்கடவோம்! இயேசுவின் சுவிசேஷ வீரர்களாய் முன்னேறிச் சென்றிடுவோம்!

- R.ஸ்டான்லி BYM

## ‘அவர் தரும்’ நிலைத்திருக்கும் சந்தோஷம்!

*‘லோக சந்தோஷம்’ மறுப்பவனே சீஷன்*

இந்த உலக ராஜ்ஜிய சந்தோஷம் வேறு, தேவராஜ்ஜிய சந்தோஷம் வேறு! அது, விண்ணிற்கும் மண்ணிற்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசம்! பரலோக இராஜ்ஜியத்தில் ஒருவன் மனந்திரும்பி மறுபடியும் பிறக்கும்போதுதான் “இரட்சிப்பின் சந்தோஷம்” அவனுக்குள் தொடங்குகிறது: இவ்வாறு, பரிசுத்தாவியினால் சந்தோஷம்! கர்த்தருக்குள் சந்தோஷம்! என உலக சந்தோஷத்தை வேறுபடுத்தி நிலைத்திருக்கும் தன் சீஷர்களுக்கே “**என்னுடைய சந்தோஷம்** உங்களில் நிலைத்து.... அது, **உங்கள் சந்தோஷமாய்** மாறும்” என இயேசு யோவான் 15:11-ல் வாழ்த்தினார்!

*ஆகிலும், நம் ஜீவ காலமெல்லாம், உலகத்தின் அதிபதி ‘லோக சந்தோஷத்தை’ நம் பாதபடியில் வைத்து சோதிப்பதும், நாம் சற்று தடுமாறி, அதன்பின் துக்கிப்பதும் நடைபெறும் என யோவான்16:20-ல் இயேசு குறிப்பிட்டார்! அதுபோன்ற தடுமாற்றம் ‘கொஞ்ச காலம்’ மாத்திரமே.... அதனிமித்தம் நீங்கள் துக்கித்தபடியால் “மறுபடியும் கொஞ்ச காலத்திலே என்னை காண்பீர்கள்” எனவும், தம்முடையவர்களின் ஆவிக்குரிய போராட்டத்தை இயேசு முன் கூட்டியே கூறியுள்ளார்! அவர் மறுபடியும் நம்மை காண்பதாலே, நம் துக்கம் சந்தோஷமாய் மாறும்..... உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடமிருந்து எடுத்துப்போட மாட்டான்! என்ற நித்திய உத்திரவாதத்தைக் கொடுத்தார்! (யோவான் 16:22).*


அப்படியிருக்க, நமக்கு முன் வைத்திருக்கும் அவரின் சந்தோஷத்தை இவ்வுலகில் ‘எதுதான்’ பறித்துக் கொள்ள முடியும்? இயேசு அதற்கு விடையாக “ஒன்றும் உங்கள் சந்தோஷத்தைப் பறிக்க இயலாது!” என ஓங்கி ஒலித்து உத்திரவாதம் தந்தார்! (யோ.16:22).

**பிசாசின் மிகப்பெரிய தந்திரம், நமக்கு ‘உயிர்நாடியாய்’ இருக்கும் இந்த சந்தோஷத்தை திருடுவதுதான்!** பாவிகளால் ஏற்பட்ட விரோதங்களோ, சொந்த மக்களால் வீசப்பட்ட அவமானங்களோ..... இயேசு தனக்கு முன் வைத்திருந்த, ‘சந்தோஷத்தைப்’ பறிக்க இயலவில்லையே! (எபி.12:2). ஆம், பிதாவின் சமூகத்து நித்திய பேரின்பத்தில் ஜெயமே ஜெயமென அவர் அமர்ந்ததற்கு முக்கிய காரணம் “அவர் தனக்கு முன்வைத்து நடந்த சந்தோஷமே!” என அறிந்த, நாம் அவரது அடிச்சுவட்டில் ‘மாறாத சந்தோஷம் உடையவர்களாய்’ பின்செல்லக்கடவோம்!

- T.ரத்தினகுமார்

சீனாவில் தியாக ஊழியம் செய்த தாசன்!

## ஹட்சன் டெய்லர்



ஒரு சுவிசேஷ கைப்பிரதி மூலமாய் 17-வது வயதில் இரட்சிக்கப்பட்ட ஹட்சன் டெய்லர், தன் தந்தையின் சீன ஊழிய பாரத்தை தனதாக்கிக்கொண்டார்! நான் விரைவில் "சீன மிஷனெரியாய் கர்த்தருக்கு பணியாற்றுவேன்" என அடிக்கடி தன் விசுவாச அறிக்கையை கூறி வந்தார். தன் மருத்துவ கல்வியை, முற்றிலும் முடிக்காமலே, சீன தேசத்துக்கு பயணிக்க ஆயத்தமானார். அக்காலத்தில், சீனாவிலிருந்து திரும்பிய ஒரு ஜெர்மானிய மிஷனெரி, "ஹட்சன், நீ அங்கு ஊழியம் செய்வது கஷ்டம். சீனா ஒரு கம்யூனிஸ கொள்கை உடையது. கிறிஸ்தவர்களை அவர்களுக்கு பிடிக்காது. உன் தலைமயிர் சிவப்பு கலந்த நிறமாய் இருப்பதால், உன்னை "சிகப்பு முடி பிசாசு" என ஓடி விடுவார்கள், நீ அவர்களை நெருங்கி ஊழியம் செய்ய முடியாது" என்றெல்லாம் அதைரிய வார்த்தைகள் கூறினார். ஹட்சனோ, "இல்லை, கர்த்தர் என்னை பாதுகாத்து நடத்துவார்" என தன் பெற்றோர்களின் ஆசியோடு பயணித்தார். ஏற்கனவே, தன் மிஷனெரி ஊழியத்திற்காக கடின பயிற்சி எடுத்திருந்தார். தன் மெத்தை படுக்கையை புறக்கணித்து தரையில் படுத்து பழகினார். தன் பயணத்தில், படகில் புயல்வீச, வேறொரு கரைக்கு படகு சென்றுவிட்டது. அந்த தீவில் உள்ளவர்கள் நரமாமிசம் புசிப்பவர்கள். ஹட்சன் ஊக்கமாய் ஜெபித்த சில நிமிடங்களில், படகு வேறு திசைக்கு இழுத்துச் செல்லப்பட்டு, காப்பாற்றப்பட்டார்! இதுபோன்று அனேக, கடின சூழ்நிலைகளில் கர்த்தரையே நம்பி வாழ்ந்து, அவரது விசுவாசம் பெலப்பட்டது.

51-வருட தன் சீன ஊழியத்தில், அவர் மூலமாய் பல்லாயிர கணக்கில் சீனாவில் சபைகள் தோன்றின. அவர் மூலமாய் சுமார் 35-ஆயிரம் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். அவர் மூலமாய் சுமார் 50-ஆயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். கடைசி அந்திம காலத்தில் "சிங்கிஷா" மிஷன் வீட்டில் இளம் மிஷனெரிகளுக்கு ஒரு கூட்டம் வைத்திருந்தார். அதில் "இதோ பாருங்கள், என் மனைவியின் கல்லறை, என் 4-பிள்ளைகளின் கல்லறை இங்குதான் புதைக்கப்பட்டிருக்கிறார்கள்! எல்லாவற்றிற்கும் மேலாய் என் ஆண்டவர் என் அருகில் உள்ளார்! என் ஊழியம் நிறைவேற்றி, என் இனிய குடும்பத்தை ஆண்டவரோடு சந்திப்பேன்" என உருக்கமாய் சாட்சி கூறி, தன் 73-வது வயதில் கர்த்தரின் சமூகம் ஜெயமாய் சேர்ந்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## நித்தியம் வரை பின்தொடரும் நமது நினைவுகள்!

நாம் இந்த உலகத்தை விட்டு மறுமைக்குள் கடந்து செல்லுகையில் இந்த உலகத்தில் நமக்குள்ள நினைவுகள் அனைத்தும் மறுமை உலகத்திற்கும் தொடர்ந்து வருகின்றது என்பதைப் பரிசுத்த வேத புத்தகம் மிகத் தெளிவாக ரூபகாரப்படுத்துகின்றது. "மகனே அதை நினைத்துக்கொள்" என்று தேவன் சொல்லும்போது நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அதை நினைவு கூர்ந்தே தீர வேண்டும்! நாம் இந்த உலகத்தில் சிறிதும், பெரிதுமான எவ்வளவோ காரியங்களைச் செய்கின்றோம். அவை அனைத்தும் நித்தியமாக நமது நினைவிலிருந்து அற்றுப்போயிற்று என்றும் நினைத்துக் கொள்ளுகின்றோம்.

ஜாண் காஃப் என்பவர் தனது தாயைப்படுத்தின பாடுகளைக் குறித்துப் பேசுகையில் "என்னை உயிரோடு கொல்லும் அந்த நினைவுகள் என்னைவிட்டுப் போகக் கூடியது சாத்தியமானால் எனது வலது கரத்தையே அதற்கு விலைக்கிரயமாக வெட்டிக் கொடுக்கத் தயார்" என்று சொல்ல நான் கேட்டிருக்கின்றேன். அந்த நினைவுகள் அவனது கல்லறை வரை அவனைத் தொடர்ந்து செல்லும். அவன் அதை எக்காலத்தும் மறக்கவே இயலாது!

இந்த உலகத்தில் நாம் செய்த அநேக செயல்கள் நம்மால் மறக்கப்பட்டு போய்விட்ட போதினும், அவைகள் யாவும் நம் நினைவின் ஆழத்தில்தான் இன்னும் புதையுண்டு கிடக்கின்றன. அவை யாவற்றையும் தேவன் ஒன்றன் பின் ஒன்றாக நம் நினைவுக்கு கொண்டு வருகையில், அவை யாவும் திரும்பவுமாக நம் நெஞ்சில் பசுமையாகத் துளிர்விட்டுத் தோன்றும். "மகனே அதை நினைத்துக்கொள்" என்று கர்த்தர் சொல்லுகையில் நமது நினைவின் இரகசிய நரம்பை கர்த்தர் தொடுவார். உடன்தானே, மறைந்து கிடக்கும் அனைத்து நினைவுகளும் பொங்கி வரும் நீர் ஊற்றைப் போன்று கொப்பளித்துக் கொண்டு வரும். நாம் அவற்றை ஒருக்காலும் மறக்கவியலாது. மாறாக, நாம் அவற்றை நினைவு கூர்ந்தே தீர வேண்டும்!

சுவிசேஷ நற்செய்தி என்னவெனில், நாம் மனம் வருந்தி "அறிக்கை செய்யும்" பாவங்கள் முழுவதையும் இயேசு மன்னித்து, நம்மை இரட்சிப்பார்! என்பதேயாகும்.

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**